SAGARMALA
PORT-LED PROSPERITY

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect

Fax : 91-461-2352232
Email id : secretary@vocport.gov.in
Website : www.vocport.gov.in

Press Release No. 12 Dated: 10.11.2023

**Celebration of Vigilance Awareness Week -2023**

**Valedictory function in V.O.Chidambaranar Port Authority**

The valedictory function of Vigilance Awareness Week – 2023 was held at V.O.Chidambaranar Port Authority on 10th November, 2023. Shri. S. Muralikrishnan, IDAS, Chief Vigilance Officer, welcomed the gathering and highlighted the system improvements carried out in the Port for ensuring transparency in Port operations. He also highlighted this year's theme 'Say no to corruption; commit to the Nation' to the gathering and stated that Vigilance Awareness Week fosters a culture of integrity, transparency, and ethical behavior within our organization and the community at large.

The Chief Guest of the function, Shri G.Kalaimani, Superintendent of Police, Anti Corruption Branch / CBI, Madurai, in his address stated that cultivating a culture of vigilance would inspire individuals to become ambassadors of integrity and contribute towards success of the organization's growth.

Shri Bimal Kumar Jha, Chairperson (I/C), V.O.Chidambaranar Port Authority, in his inspiring address, stated that it is the duty of every Parent & teacher to inculcate moral values, integrity and ethics of public life to children. He also exhorted the employees of VOC Port to adopt fair means & due

processes in personal & official conduct and bring probity in public and private life. He also stressed the importance for intellectual integrity and emphasized that employees should be vigilant in the performance of their day- to-day duties. He added that V.O.C. Port is also on a rapid path of progress and poised to became a smart and sustainable hub Port in the near future.

During the week long Vigilance Awareness Week celebration from $30^{th}$ October to $5^{th}$ November, 2023, under the theme ‘Say no to corruption; commit to the Nation’, Skit, Essay writing, Slogan writing, Debate, Singing, Dance and Steet Play competitions were conducted for the employees, School children and College Students. Sensitization seminars for Contractors, Vendors and Officers & Employees of the Port & street play for general Public, highlighting ‘Awareness building programmes on Public Interest Disclosure and Protection of Informers (PIDPI)’ were also organized.

Shri G.Kalaimani, Superintendent of Police, Anti Corruption Branch / CBI, Madurai, distributed the prizes to the winners of various competitions. Heads of department, senior officers and employees of the Port, teachers and students of various schools attended the function in large numbers.

The above details were released in a Press - Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

SAGARMALA PORT-LED PROSPERITY

Global Connect

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : secretary@vocport.gov.in
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண் : 12 தேதி : 10.11.2023

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு விழிப்புணர்வு வார விழா- 2023 நிறைவு நாள் கொண்டாடங்கள்**

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிறைவு விழா, வெகு விமரிசையாக நவம்பர் 10-ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

உயர்திரு. எஸ். முரளிகிருஷ்ணன் IDAS, தலைமை கண்காணிப்பு அதிகாரி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அவர் கூறுகையில், துறைமுகத்தின் வெளிப்படையான செயல்பாடுகளை சுட்டிகாட்டினார். மேலும் அவர் இந்த வருடத்தின் கருபொருளான 'ஊழல் வேண்டாம் என்று சொல்லுவோம் ! தேசத்திற்காக அதை உறுதி கொள்வோம்' என்ற தலைப்பில் ஒரு வாரமாக கொண்டாடப்படும் இவ்விழாவானது சமூகத்தின் ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுக்க நெறிமுறை நடத்தை ஆகியவற்றை வளர்க்கிறது என்று கூறினார்.

உயர்திரு. ஜி. கலைமணி, தலைமை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு பிரிவு, மத்திய புலனாய்வு பணியகம், மதுரை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தனது சிறப்புரையில் லஞ்ச ஒழிப்பு சார்ந்த விழிப்புணர்வை வளர்ப்பதன் மூலம் தனிநபர்களை ஒருமைப்பாட்டிற்கு உரியவர்களாக உருவாக்குவதற்கு ஊக்கமளித்து அவர்களை சார்ந்த நிறுவனத்தின் வளர்ச்சியின் வெற்றிக்கு பங்களிக்கும் என்று கூறினார்.

இவ்விழாவில் உயர்திரு பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் (பொறுப்பு) அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில் ஒழுக்கநெறி முறைகளை பின்பற்றி குழந்தைகளை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் போதித்தால் மட்டுமே நாளைய ஊழலற்ற புதிய இந்தியாவை அவர்களால் உருவாக்க முடியும் என்று கூறினார். மேலும் தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வ நடத்தையில் நியாயமான வழிமுறைகள் மற்றும் முறையான செயல்முறைகளை பின்பற்றுமாறு துறைமுக ஊழியர்களுக்கு அறிவுறுத்தினார். அறிவுசார் ஒருமைபாட்டின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தியது மட்டுமல்லாமல் துறைமுக ஊழியர்கள் தங்களுடைய அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

கண்காணிப்பு விழிப்புணர்வு வார விழாவில், (30 அக்டோபர் முதல் 5 நவம்பர் 2023) ''ஊழல் வேண்டாம் என்று சொல்லுவோம் தேசத்திற்காக அதை உறுதி கொள்வோம்'' என்ற தலைப்பில் கண்காணிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வாரத்தில் ஒவ்வொரு நாளும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர், துறைமுக ஊழியர்களுக்கு இடையே தெரு கூத்து, நாடகம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விவாதப் போட்டி, பாட்டுப் போட்டி, நடனப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும் ஒப்பந்தகாரர்கள் துறைமுக ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு ஊழலை பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெற்றது.

உயர்திரு. ஜி. கலைமணி, தலைமை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு பிரிவு, மத்திய புலனாய்வு பணியகம், மதுரை அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் ஊழியர்களுக்கு பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள். இவ்விழாவில் துறைமுக குழு உறுப்பினர்கள், துறை தலைவர்கள், அதிகாரிகள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி